**தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு – 322 தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 23 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 706.51 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 682.01 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 24.50 மில்லியன் அதாவது 3.47 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 337.21 | 332.79 | 4.42 | 1.31 |
| மூலதனம் | 369.30 | 349.22 | 20.08 | 5.44 |
| மொத்தம் | 706.51 | 682.01 | 24.50 | 3.47 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக திணைக்களத்திற்கு ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 02 அலுவலகங்களினால் ரூபா 17.25 மில்லியன் கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 17.14 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க, ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 0.11 மில்லியன் அதாவது 0.63 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதி ஏற்பாட்டை வழங்கிய அமைச்சு /அலுவலகம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| அரச பாதுகாப்பு அமைச்சு | 1.55 | 1.54 | 0.01 |
| சனாதிபதி செயலகம் | 10.14 | 10.07 | 0.07 |
| பிரதமர் அலுவலகம் | 5.56 | 5.53 | 0.03 |
| மொத்தம் | 17.25 | 17.14 | 0.11 |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக 20.03.02.19 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்காக ரூபா 500 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 547.8 மில்லியன் வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 109.6 சதவீதமாக இருந்தது.

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 32201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான து | ஆகக்குறைந் த எல்லை | உள்ளவாறான து | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான து |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 22.64 | 21.46 | 12.64 | 17.08 | 80.00 | 58.53 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0405/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 0.11 மில்லியனாக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 177.51 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0087/000 | 4.23 |
| 6000/0000/00/0013/0057/000 | 5.57 |
| 6000/0000/00/0006/0070/000 | 145.40 |
| 6000/0000/00/0016/0039/000 | 22.07 |
| 6000/0000/00/0018/0049/000 | 0.24 |
| மொத்தம் | 177.51 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு செலவின விடயமொன்றிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3.00 மில்லியனான மொத்த தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 10 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டதன் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாடுகளில் 07 சதவீதம் தொடக்கம் 23 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டன.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 5.01 மில்லியன் கூட்டுத்தொகையான 38 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

32201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 262,307 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 1 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகள் வரையான காலவீச்சினைக் கொண்டிருந்தும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த அவிசாவளை தாவரவியல் பூங்காவின் 02 உத்தியோகபூர்வ இல்லங்களின் திருத்த வேலைகள் மற்றும் 02 சிற்றுண்டிச்சாலைகளின் நிர்மாணம்.

(ஆ) 2014 ஆம் ஆண்டினதும் 2015 ஆம் ஆண்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கம்பஹா தாவரவியல் பூங்காவின் வாகன நிறுத்துமிடத்தை புதுப்பித்தல்.

#### 3.5.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ் அறிக்கை 2016 யூன் 14 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

மோட்டார் வாகனமொன்று 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. அவ்வாகனத்தை கைதவிர்ப்பதற்கு 2016 யூன் 14 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2016 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை

அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்திற்குரிய 25 பிரிவுகளில் 07 பிரிவுகளின் அவ் அறிக்கை 2016 யூன் 23 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்ளுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | |
| நிதிப் பிரமாணம் 880, 881 மற்றும் 882 | பணம் சம்பந்தமாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைமுறி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) **பொது நிர்வாக சுற்றறிக்கை** | |
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசோதனை 06 மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

**3.8 செயலாற்றல்**

**பிரதான செயற்பாடுகளுக்கு முரணான பணிகள்**

மருந்து நாற்றுக்கள் மற்றும் மரங்களை பராமரிப்பது தொடர்பான பயிற்சி நிலையமொன்றாக பராமரிக்கும் நோக்கில் மீகலேவ பசுமை இல்ல பயிற்சி நிலையம் 2008 ஆம் ஆண்டின் போது தாபிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அதனை செயற்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பமொன்று கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளை பின்பற்றாமை**

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவு நடைமுறை மூலம் முடியுமான வரை பொதுப் போட்டிக்கு இடமளிக்கப்படுவதன் மூலம் பொருத்தமான கொள்வனவு செயற்பாடு பின்பற்றப்பட வேண்டிய போதிலும் 08 ஏக்கர்

பரப்பளவிலான சீதாவக்க வலய தாவரவியல் பூங்காவிற்குரிய உலர் வலயத்திற்குரிய தேயிலையுடன் கூடிய காணியைக் குத்தகைக்கு வழங்கும் போது கொள்வனவுச் செயற்பாட்டிலிருந்து விலகி முன்னைய குத்தகை தொகைக்கு 15 சதவீத அளவில் கூறுவிலையை அதிகரித்து பழைய குத்தகையாளருக்கு அக்காணி வழங்கப்பட்டிருந்தது.

**3.10 முகாமைத்துவ பலவீனங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பேராதனை ரோயல் தாவரவியல் பூங்காவில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 468,428 தொகை செலவு செய்து 2,493 அந்தூரியம் கன்றுகள் மரபணுக்குட்படுத்தப்பட்டிருந்த போதிலும், மேம்படுத்தப்பட்ட கன்றுகளாக எவ்வித கன்றொன்றும் ஆய்வுகூடத்திலிருந்து நாற்றுமேடைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பார்வையாளர்களின் பார்வைக்காக தற்போது பேராதனை, ஹக்கல, கம்பஹா, மிரிஜ்ஜவில மற்றும் அவிசாவளை ஆகிய 05 தாவரவியல் பூங்காக்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் அதில் கம்பஹா மற்றும் மிரிஜ்ஜவில ஆகிய 2 பூங்காக்களை பார்வையிட வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. இலங்கையின் தேசிய தாவரவியல் பூங்காக்களை உயர்மட்டத்தில் பராமரித்துச் செல்வது திணைக்களத்தின் பிரதான நோக்கமொன்றாக இருந்த போதிலும், அது தொடர்பாக கூடிய கவனமொன்று செலுத்தாமையால் இந்நிலைமை ஏற்பட்டிருந்தது.

**3.11 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகள் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 33 | 15 | 18 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 09 | 05 | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 186 | 113 | 73 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 521 | 515 | 40 | 34 |
| (v) | ஏனையவை (சமுர்த்தி அதிகாரசபையிலிருந்து இணைக்கப்பட்டுள்ள) | - | 10 | - | 10 |
| | மொத்தம் | 749 | 658 | 135 | 44 |